THE MADURA-RAMNAD DIOCESAN MAGAZINE

SATHIAVARTHAMANI

December, 1954

CONNEMARA PUBLIC LIBRARY
18 AUG 1955
MADRAS

மதுரை-ராமநாதபுரம்

அத்தியட்சாதீனத் தீபிகை

சத்தியவர்த்தமானி

டிசம்பர், 1954

மதுரை-ராமநாதபுரம் அத்தியட்சாதீனத் தீபிகை

பத்திராதிபர் :— A. சாமுவேல் ஐயர், செமினரி, பசுமலை,
மதுரை ஜில்லா.

உதவி பத்திராதிபர் :— C. S. தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்,
ராமநாதபுரம் ஜில்லா.

மானேஜர் :— கனம் ஜாஷ்வா அவர்கள், மதுரை-ராமநாதபுரம்,
அத்தியட்சாதீன பொக்கிஷதார்,
211, தெற்கு மாரட் வீதி, மதுரை.

பதிப்பாளர் :— சங்கை C. P. ஹைனமென், லிஞக்ஸ் பிரஸ், பசுமலை,
மதுரை ஜில்லா.

பத்திரிகைக் கமிற்றி :—

கனம் பிரடரிக் ஜேக்கப், மதுரை.
„ தேவப்பிரகாசம் ஐயர், திண்டுக்கல்.
„ தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்.
„ ஜாஷ்வா, அத்தியட்சாதீன பொக்கிஷதார்.
„ A. சாமுவேல் ஐயர், பசுமலை (தலைவர்.)

முக்கிய பொருளடக்கம்

1. அத்தியட்சரின் கடிதம்.
2. திருச்சபைச் செய்திகள்.
3. சிறுவர் பாகம்.
4. பிரசங்கக் குறிப்புகள்.
5. இயேசுவின் ஜெபப்பள்ளி.
6. கிறிஸ்து ஜயந்தி நடிப்பு.
7. இரக்ஷணிய மனோகரம.
8. வேத விஞக்களும, விடைகளும.
9. பந்தயக் கதைப்போட்டி.

தென் இந்திய சபையைச் சேர்ந்த
மதுரை—இராமநாதபுரம் அத்தியட்சாதீனத்தின்

சத்திய வர்த்தமானி

புஸ்தகம் XVI பசுமலை, டிசம்பர் 1954 இலக்கம் 2

வருடசந்தா: 1 ரூ. தபாற்கூலி உட்பட.

அத்தியட்சரின் கடிதம்

தல்லாகுளம், மதுரை,
நவம்பர் 27, 1954.

கிறிஸ்துவுக்குள் அன்புள்ள மக்களே:—

அக்டோபரில் கனம் தானியேல் அவர்களும் அவர்களைச் சேர்ந்த கூட்டத்தாரும் நடத்திய ஆவிக்குரிய கூட்டங்களின் பலனாய் பரிசுத்த ஆவியானவரின் கிரியை பலஇடங்களில் நடைபெற்று வருகிற அறிகுறிகளைப்பற்றிக் கேள்விப்படுகிறேன். அநேக இடங்களில் ஆவியானவர் மனிதருடைய இருதயங்களைத் தொட்டு வருகிறதற்காக நான் அதிக நன்றி பாராட்டுகிறேன். வருகிற வருட ஆரம்பத்தில் கனம் தானியேல் அவர்களையும் அவர்களைச் சேர்ந்தவர்களையும் கூட்டங்கள் நடத்தும்படி தெற்கு லோக்கல் கவுன்சிலும் சாட்சியாபுரம் லோக்கல்கவுன்சிலும் விரும்பினார்கள். அந்த அழைப்பை அவர்களும் ஒப்புக் கொண்டார்கள். அத்தியட்சாதீனத்தின் இதர பாகத்திலுள்ளவர்களுடைய அழைப்பை நான் சந்தோஷமாய் எதிர் பார்ப்பேன். நமது விண்ணப்பங்களைக் கடவுள் அங்கீகரிக்குமட்டும் சபையின் உயிர்மீட்சிக்காக நாமனைவரும் தொடர்ச்சியாய் ஜெபித்து வருவோமாக.

இந்தமாதம் அமெரிக்காவிலிருந்து கனம் டாக்டர்ரிக்ஸ் ஐயரவர்களும், மனைவியும் பிள்ளைகளும் இந்தியா திரும்பிய செய்தி உங்களுக்கு சந்தோஷமளிக்கும். பசுமலையில் சில நாட்கள் தங்கியபின் அவர்கள் பாஷைகற்றுக் கொள்வதற்காக பெங்களூர் சென்றனர். அடுத்த ஜூன்மீ கிழாஞ்சுனைக்குத் திரும்பி தமது ஊழியத்தை ஆரம்பிப்பாரெனவும், அத்தியட்சாதீனத்தில் வியாதிகளைத் தடுக்கும் முறைகள் சம்பந்தமாய் உழைப்பாரெனவும் எதிர்பார்க்கிறோம்.

டிசம்பர் மீ 21உ (பரி. தோமாவின் திருநாள்) கர்த்தருக்குச் சித்தமானால் ராமநாதபுரத்தில் கனம் ஜேம்ஸ் ராஜா அதிஷ்டம் அவர்களைக் குருவாகவும் கனம் எபநேசர் அவர்களை டீக்கனாகவும் அபிஷேகம் செய்ய ஆசிக்கிறேன். இது அங்குள்ள ஆலயத்தில் நடை-

பெறும் இந்த ஆராதனைக்கு நமது அத்தியட்சாதீனத்தின் இதர பாகங்களிலுள்ளவர்கள் அநேகர் வருவார்களெனவும் நீங்கள் யாவரும் இவர்களை உங்கள் ஜெபங்களில் நினைப்பீர்களெனவும் எதிர் பார்க்கிறேன்.

இவ்வருட ஆரம்பத்தில் கர்த்தருக்கு சித்தமானால் கனம் டேவிட் செல்லப்பா ஐயரவர்கள் சென்னையின் அத்தியட்சராக அபிஷேகம் செய்யப்படுவார்கள். அவருக்காகவும் சென்னை அத்தியட்சாதீனத்திற்காகவும் ஜெபிப்பீர்களென்று நினைக்கிறேன்.

கிறிஸ்து ஜயந்திக்காக ஆயத்தப்படும் நாட்களில் இக்கடிதத்தை நீங்கள் வாசிப்பீர்கள். அது நம்மெல்லாருக்கும் அலுவல்கள் நிறைந்த காலம். ஜெபத்தின் மூலம் நமதிதயங்களை ஆயத்தம் செய்யவும், தமது குமாரன் மூலமாய்க் கடவுள் பாராட்டிய பெரிய ஈவைக் கொண்டாடவும் நமதலுவல்கள் தடையாயிருக்கக்கூடாது. கிறிஸ்து ஜயந்தி பெரிய சந்தோஷமான காலமாயிருக்கவும், எல்லாவற்றிற்கும் மேலாக கிறிஸ்து நமதிதயங்களில் புதிதாய் ஜனிக்கும் காலமாயிருக்கவும் நான் உங்களுக்காகவும் சபையின் எல்லா அங்கத்தினருக்காகவும ஜெபித்து வருகிறேன்.

இப்படிக்கு,
கிறிஸ்துவுக்குள் உங்களன்புள்ள ஊழியன்,
லெஸ்லி நியூபிகின்,
அத்தியட்சர்.

அத்தியட்சரின் அலுவல்கள்

டிசம்பர்	6—9	அத்தியட்சாதீனக் கமிற்றிகள்.
	10	ராமநாதபுர ஆஸ்பத்திரி ஒடுக்கக் கூட்டம்.
	11—12	மடத்தாகுளம் பாஸ்டரேட்—திடப்படுத்தல்.
	15	அத்தியட்சாதீன நிர்வாகக் கமிற்றி.
	18—19	நிலக்கோட்டை பாஸ்டரேட்—திடப்படுத்தல்.
	20—21	ராமநாதபுரம்—குருவபிஷேக ஆராதனை.
	24—26	மதுரை கிறிஸ்மஸ் ஆராதனைகள்.
	27—30	விடுமுறை.
	31—ஜனு. 1	கண்டி. கிறிஸ்தவ மாணவர் சங்க இயக்கம்.
ஜனுவரி	9—10	கொடைக்கானல் மிஷனரிப் பள்ளி ஒடுக்கக் கூட்டம்.
	12	திருமங்கலம்—குருமார் ஒடுக்கக் கூட்டம்.
	13—15	,, —அத்தியட்சாதீன சங்கம்.
	16—17	பரமகுடி பாஸ்டரேட்—திடப்படுத்தல்.

திருச்சபைச் செய்திகள்.

1. சபையின் திருநாட்கள்.

ஜனுவரி	1	நவ வருடம்
		விருத்த சேதனத் திருநாள்
	2	கி. ஜனன திரு. பின் ஞாயிறு 2
	6	பிரசன்னத் திரு. பின் ஞாயிறு 1
	16	,, 2
	23	,, 3
	25	பரி. பவுல் குணப்பட்ட திருநாள்.
	30	பிரசன்னத் திரு. பின் ஞாயிறு 4.

2. மூப்பர்களின் மகாநாடு 22—23—11—54.

கொசவபட்டியை சுற்றியுள்ள அம்பிளிக்கை, நாச்சியப்ப கவுண்டன்வலசு, சக்கம்பட்டி, சிந்திலப்பட்டி, தங்கச்சாமிபட்டி, காட்டுப்பட்டி முதலிய எழு கிருமங்களில் இருந்து ஊருக்கு இரண்டுபேராகவும் மூன்றுபேராகவும், கொசவபட்டி தேவாலயத்தில் இரண்டு நாட்கள்கூடி, கனம் போதகர் அவர்களின் தலைமையில் துவங்கி ஆவிக்குரிய போதனை கொடுக்கப்பட்டது. கூட்டத்தில் சபையின் ஆவியின் வளர்ச்சிக்காக 7 சபைகளில் 7 பஞ்சாயத்து நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் சபையின் ஆவியின் வளர்ச்சிகளை கவனிக்கவும் சபைகளில் ஊழல்கள் இருந்தால் அவைகளைச் சீர்படுத்தும் நோக்கமாய் கனம் போதகர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவரும்படியாகவும் தீர்மானிக்கப்பட்டது என்று ஸ்ரீ ஆபேல் உபதேசியார் எழுதுகிறார்.

3. உயர் நிலைப்பள்ளி முகாம், குலசேகர பட்டணம்.

ஆவிக்குரிய கூட்டம் அக்டோபர் மாதம் 23ம் தேதி முதல் 26ம் தேதி முடிய நடைபெற்றது. ஓ.சி.பி.எம்., கேப்ரன்ஹால், ரட்சண்யபுரம், ராமநாதபுரம், பரி. அந்திரேயா உயர்நிலைப்பள்ளி, பசுமலை ஆகிய பள்ளிக்கூடங்களிலிருந்து மொத்தம் 40 பெண் பிள்ளைகள் வந்தார்கள். 23ம் தேதி காலை 7 : 30 மணிக்கு லேடி டோக் கல்லூரி பஸ் வந்து எங்களை அழைத்துச் சென்றது. இயற்கைக் காட்சிகளை ரசித்தவண்ணமாய் குதூகலத்துடன் குலசேகர பட்டணம் போய்ச் சேர்ந்தோம்.

சமுத்திரக்காற்று, களைப்படைந்த எங்கள் மனதை உற்சாகப் படுத்தியது. அன்றுமாலை வேத அறிவுக் களஞ்சியமென பெயர் பெற்ற டோனாவூரைச் சேர்ந்த கனம் பர்ன்ஸ் அம்மாள் தம் களஞ்சியத்தினின்று அரியபெரிய போதனைகளைக் கூறினர். தேவன்

மனிதரை எதற்கு உண்டாக்கினார்? ஊழியக்காரருக்கு எஜமான் வேண்டும். சேவை என்ற பல பொருள்பற்றி அதிகத் தெளிவாகப் பேசினார்கள். கனம் போசன்கெட் அம்மாளும், கனம் அழகுமணி அம்மாளும் தலைமை வகித்து இம்முகாமை வெகு சிறப்பாக நடத்தினார்கள். கனம் தேவநேசன் அம்மாளும், கனம் பார்பர் அம்மாளும் பாக்கள் சொல்லிக் கொடுத்தார்கள். கனம் தர்மராஜ் அம்மாள் எங்களுக்கு சுவையுள்ள உணவு கொடுத்தார்கள். மேலே குறிப்பிட்டவர்களோடு கனம் தங்கமணி அம்மாளும் தர்க்கக் கூட்டங்கள் நடத்தினார்கள். தர்க்கக் கூட்டங்களில் நல்ல கருத்துக்களை தெளிவாக விளங்கிக் கொண்டோம் கடைசி நாளை மறக்கவே முடியாது. கனம பர்ன்ஸ் அம்மாளும் கனம் அழகுமணி அம்மாளும் தற்பிரதிஷ்டை ஆராதனையை வெகு பயபக்தியோடு நடத்தினார்கள். ஒவ்வொருவரும் வேதாகமத்திலிருந்து ஒளியைப்பற்றி வாசித்தார்கள். எவ்வாறு ஒரு மெழுகுவர்த்தி எரிய, எரிய கரைகிறதோ அதேபோல் நாங்களும் கடவுளுக்குச் சேவை செய்ய ஒப்புக்கொண்டோம்.

இவ்விதம் பல இன்பங்களுடன் எங்கள் ஆவிக்குரிய கூட்டம் அழகிய வடிவததில் எங்கள் உள்ளங்களில் பதிந்து பற்பல நன்மையான காரியங்களைப் பதியவைத்து ஒற்றுமை, கூடிவாழும் சந்தர்ப்பம், எவ்விதத்திலும் கடவுளை தியானிக்க சந்தர்ப்பம், இயற்கையின் இன்பத்தைப் பருக சந்தர்ப்பம் முதலியன கிடைக்கப் பெற்று மகிழ்வுடன் இருக்கிறோம் என்று மாணவிகள் ஜாய் ஞானையாவும், வேகவதி பெருமாளும் எழுதுகிறார்கள்.

4. அகிலலோக ஜெபவாரம் ஜனுவரி 2—8, 1955.

இந்த ஜெப வாரம் கடந்த 109 வருடங்களாக ஒழுங்காய் அனுசரிக்கப்பட்டு வருகிறது. கீழ்கண்ட பொருள்களையும் வேத பாடங்களையும் உபயோகிக்கவும்.

ஜனுவரி 3 பரிசுத்த ஆவியும் உலகமும்.
சங். 139 : 1-10.
ஏசாயா 40 : 12-15
யோவான் 16 : 8-11.

" 4 பரிசுத்த ஆவியும் இரட்சகரும்.
மத். 12 : 22-32
யோவான் 16 : 12-22.

" 5 பரிசுத்த ஆவியும் திருச்சபையும்
அப். 13 : 1-4 ; 20 : 17-28
1 கொரி. 12 : 1-13.
எபே. 4 : 1-6.

ஜனுவரி 6 பரிசுத்த ஆவியும் கிறிஸ்தவனும்
அப். 1 : 6-8
ரோமர் 8 : 1-17.
எபே. 5 : 15-21.

„ 7 பரித்த ஆவியும் திருவசனமும்.
எபே. 6 : 10-20
2 தீமோ. 3 : 14-17.
1 பேதுரு 1 : 10-12
2 „ 1 : 16-21.

„ 8 பரிசுத்த ஆவியும் எழுப்புதலும்.
யோவேல் 2 : 28-32
அப். 2 : 1-4; 4 : 31-35
தீத்து 3 : 4-7.

5. மதிப்புரை.

அடியிற்கண்ட மூன்று நூல்கள் கிடைத்தன, தாய்ப்பாஷையாகிய தமிழில் கிறிஸ்தவ நூல்கள் அதிகம் கிடையா, இப்படிப் பட்ட சூழ்நிலையில் இந்தப்புஸ்தகங்கள் வெளிவந்துள்ளது நல்லதே. வேண்டிய நண்பர்கள் "திருநெல்வேலி டயோசீசன் பிரஸ், பாளையங்கோட்டை" என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

1. சில சங்கீதங்கள். (26) திருச்சி அத்தியட்சாதீன கனம் வேதநாயகம் ஐயர் இதன் ஆசிரியர், 126 பக்கங்கள் விலை 10 அணு, சங்கீதங்களுக்குரிய முகவுரை, விரிவுரையுடனும் தெளிந்த ஆராய்ச்சியுடனும், எழுதப்பட்டவை.

2. 1, 2, தீமோத்தேயு. இதுவும் திருச்சி அத்தியட்சாதீன கனம் உவில்லியம் ஐயரால் எழுதப்பட்டது, 30 பக்கங்கள், விலை 6 அணு முகவுரை, காலம், நோக்கம், வியாக்கியானம் தெளிவாய்க் கூறப்பட்டுள்ளன.

3. பரிசுத்த விவாகம். இது கனம் தோர்ணர்கல் அசரியா அத்தியட்சரவர்கள் இயற்றியது. 102 பக்கங்கள் விலை 14 அணு இயற்கைப் பிரமாணம், யூதர் பிரமாணம், அருள்நாதர் போதனை, அப்போஸ்தலர் போதனை, திருச்சபைச் சட்டம், கிறிஸ்தவ இல் வாழ்க்கை ஒழுக்கம் முதலிய அத்தியாயங்கள் உள. இதன் சம்பந்தமாயுள்ள பல அறிவுறுத்தும் விவரங்கள் அனுபந்தத்தில் உண்டு.

6. கிராம முன்னேற்ற நிலையம், பசுமலை.

பல பழவகை மரக்கன்றுகள் இங்கு வாங்கலாம். நமது நாட்டு மண்ணில் வளரத்தக்க விதமாய் ரசாயன முறையில் தயாரிக்கப்பட்டவை. வியாபார சம்பந்தமாய் இரண்டு மூன்று ஆண்டுகளில் ஊதியம் தரக்கூடிய ஒட்டுச் செடிகளும் கன்றுகளும் கிடைக்கும். தற்போது எம்மிடம் தயாராயிருப்பவை :—

1. எலுமிச்சை. (கடையம்)
2. „ (பெரியது)
3. மாங்கன்றுகள்.
4. முந்திரி.
5. அலகபாத் கொய்யா.
6. விதையில்லாக் கொய்யா.

விவரம் வேண்டியவர்கள் கனம் செல்லப்பா, கிராம முன்னேற்ற ஊழியர், பசுமலை என்ற விலாசத்திற் கெழுதக் கேட்கிறோம்.

சிறுவர் பாகம்

கிறிஸ்து ஜயந்திக் கதை

" வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம் "

(கனம் உவைட் அம்மாள் எழுதியதை
மொழி பெயர்த்தது வேதப்பாடசாலை மாணவர் ஸ்ரீ எம் ஜெயராஜ்)

தயாபுரம் பெண் பாடசாலைப் பிள்ளைகளிடையே ஒரே குதூகலமும் ஆரவாரமுமாய் இருந்தது.

காரணம், கிறிஸ்மஸ் விடுமுறை ஆரம்பிக்க இன்னும் இரண்டே வாரங்கள் தான் இருந்தன. ஒவ்வொரு நாள் காலையிலும் ஒவ்வொரு பிள்ளைகளும் தங்களுக்குத் தெரிந்த முறையில் ஒவ்வொரு நாளையும் எண்ணிக் கழித்துக்கொண்டு வந்தார்கள். புஷ்பம் என்ற பெண் தன பெட்டியில் ஏற்கனவே பாடசாலை நாட்களுக்குச் சமமான கற்களை எண்ணி வைத்துக்கொண்டு தினமும் காலையில் எழுந்ததும் ஒவ்வொன்றாக ஜன்னல் வழியே வீசி யெறிந்து மகிழ்வாள். வசந்தா என்ற பெண் தன் நோட்டுப் புத்தகத்தில் சதுரக் கட்டங்கள் வரைந்து ஒவ்வொரு நாளும் காலையில் ஒரு கட்டத்தில் சிவப்பு வர்ணம் தீட்டி மகிழ்வாள். இப்படியே பல பெண்களும் பல வழிகளில் நாட்களைக் கழித்து எண்ணி வந்தனர். ஓய்வு நேரங்களில் எல்லாம் பிள்ளைகள் கிறிஸ்மஸ் பண்டிகையைப் பற்றியும், விடுமுறை

நாட்களை எப்படிக் கழிப்போம் என்பதைப் பற்றியும் என்னென்ன ருசியுள்ள பதார்த்தங்கள் உண்போம், என்னென்ன வெகுமதிகள் தங்களுக்குக் கிடைக்கும் என்பதைப் பற்றியுமே பேசிக்கொண்டிருந்தனர் சிலர் பலகாரம், சிலர் துணிமணி, நகை நட்டு ஆகியவற்றைப் பற்றிப் பேசினார்கள்.

லீலா ஏற்கனவே பெற்றோர்களை இழந்துவிட்டிருந்தாள். அவளுக்குச் சொந்த வீடு இல்லை, தன் மாமா வீட்டில் வளர்ந்து வந்தாள். மாமாவும் அத்தையும் தங்கள் சொற்ப வருமானத்திலிருந்து தங்கள் பிள்ளைகளையும லீலாவையும் போஷித்து வந்தனர். அதிலும் தாய் தந்தையரற்ற லீலாவிடம் அதிக அன்பு காட்டி வந்தனர். கிறிஸ்மஸ் பண்டிகைக்குத் தனக்குத் தங்க வளையலோ, பட்டுப் புடவையோ கிடைக்காது என்பது லீலாவுக்கு நன்கு தெரியும். மாமா மிகவும் கஷ்டத்துடன் தன்னைப் படிக்கவைத்து வருவதையும் அறிவாள். ஆகவேதான் அவள் மற்றப் பிள்ளைகளின் குதூகலப் பேச்சுக்களில் கலந்துகொள்ளவில்லை லீலா தன் நிலையை எண்ணிப் பார்க்கும் போது அவளை அறியாமலே அவள் கண்களில் கண்ணீர் சுரப்பதை அவளால் தடுக்க முடியவில்லை.

பள்ளி ஆரம்பிப்பதற்கு மணியடித்தது. வழக்கப்படி எல்லாரும் ஆராதனைக்குப் போனார்கள். லீலாவும் விசனத்தோடே போனாள் ஆனால் ஆலயத்துக்குள் நுழைந்ததும எதிரேயுள்ள ஒரு பெரிய கண்ணாடி ஜன்னலில் இயேசுகிறிஸ்து ஓர் ஆட்டுக்குட்டியைக் கையில் வைத்துக் கொண்டிருப்பதுபோல் கண்ணாடியில் வர்ணம் பூசப்பட்ட படத்தைப் பார்த்தவுடன் லீலாவுக்குச் சற்று ஆறுதல் ஏற்பட்டது. இரண்டாம் மணியடித்ததும் அன்றை கூட்டத்தை நடத்த லீலாவுடைய வகுப்பு ஆசிரியையே பீடத்தில் வந்து நின்றதைக் கண்டதும் லீலாவுக்கு இன்னும் கொஞ்சம் சந்தோஷமுமாயிருந்தது. ஆனால் அடுத்த விநாடி !! கிறிஸ்மஸ் சம்பந்தமான ஓர் பாட்டைப்பாடுவோம் என்று தன் ஆசிரியை கூறியதைக் கேட்டதும், லீலாவுக்கு மிகவும் விசனமாய்ப் போய்விட்டது. கிறிஸ்மஸ் நாட்களைப்பற்றியே முற்றிலுமாக எந்நாளுமே மறந்து விடவேண்டுமென்று தீர்மானித்திருந்த அவள் உடனே சட்டென்று தன் இரு காதுகளையும் கைகளால் மூடிக்கொண்டாள். என்ற போதிலும் தன் ஆசிரியை வாசித்த வேதபாகத்தின் ஒரு வசனம் அவள் காதில் விழுந்தே விட்டது ஆதாவது "அவர்கள் அந்த நட்சத்திரத்தைக் கண்டபோது, மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்தார்கள்.............. தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து .. .. காணிக்கையாக வைத்தார்கள். (மத். 2 : 10, 11) என்பதே. இதைப்பற்றி ஆசிரியை அம்மாள் பிரசங்கித்தபோது, சாஸ்திரிகள் காணிக்கைகளைப் படைத்

தார்கள் என்று கூறிய வார்த்தையைக் கேட்டதும் லீலாவுக்கு ஒரே ஆச்சரியமும் அற்புதமுமாய்த் தோன்றியது. சாஸ்திரிகள் வெகுமதியைப் பெறவில்லை. ஆனால் கொடுத்தார்கள். அப்படி யானால் கிறிஸ்மஸ் நாளில் நான் செய்யவேண்டியதென்ன? இந்தக் கேள்வி லீலாவின் மனதில் அதிகமாகக் கிரியை செய்தது. கொடுக்க வேண்டும் என்று லேசாய்த் தீர்மானிக்கலாம். ஆனால் கொடுக்கப் பொருள் வேண்டுமே? லீலாவோ ஏழைப் பெண்.

இதே சிந்தனையில் லீலா அன்று காலை முதல் பிரியட் லீலாவுக்குப் பிரியமான கைவேலைப் பாடமாயிருந்தாலும் அவளுக்கு வேலையில் மனம் நாடவில்லை. "நான் எப்படியாவது என் மாமாவுக்கும், அத்தைக்கும், பிள்ளைகளுக்கும் ஏதாவது வெகுமதி கொடுக்க வேண்டுமே?, அவர்கள் என்னை எவ்வளவு அன்போடு நேசிக்கிறார்கள்? இதற்கு யார் எனக்கு உதவுவார்கள்? மாமாவிடம் பணம் கேட்பது சரியல்லவே?" என்று பலவாறாக சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

கைவேலைப் பாடம் முடிவடைந்ததை அறிவிக்க மணியடித்து விட்டது. லீலாவின் முகத்தில் ஓர் சந்தோஷ ரேகை படர்ந்தது. அவள் கைவேலைப் பாடத்தில் விருப்ப முள்ளவள். அவளும் மற்றப் பிள்ளைகளும் அழகான பொருள்களைச் செய்து, பரீட்சை அதிகாரி பார்ப்பதற்காகச் சுவற்றில் தொங்கவிடப்பட்டிருந்த பல அழகிய பொருட்களைப் பார்த்தாள். திடீரென்று தன் மனப் போராட்டத்திற்கு ஓர் முடிவு கண்டாள். அதாவது, தன் ஆசிரியையிடம் கேட்டு, பாடசாலை நேரமல்லாத மற்ற இடை வேளைகளிலும் ஓய்வு நேரங்களிலும் மிகவும் பிரயாசைப்பட்டு வேலை செய்தால் தன் மாமா, அத்தை, பிள்ளைகள் எல்லாருக்கும் வெகுமதிப் பொருள்கள் தயாரித்து விடலாமே என்று நினைத்தாள். அவ்வாறே கைவேலை ஆசிரியையிடம் தன் எண்ணத்தை வெளியிட்டாள். அந்த அம்மாள் மிகவும் சந்தோஷத்தோடு அனுமதி தந்தார்கள்.

லீலாவின் கைகள் ஒவ்வொரு நாளும் இடை நேரங்களில் சுறு சுறுப்பாய் வேலை செய்தன தன் அத்தைக்கு அடுப்புப்பற்றவைக்கும்போது வீசுவதற்கும், சின்னப் பாப்பா தூங்கும்போது வீசுவதற்கு வர்ண ஓலையினால் ஓர் அழகிய விசிறி செய்தாள். மாமாவின் வேதாகமப் புத்தகத்துக்கு அட்டை போடுவதற்காக ஒரு பெரிய வெள்ளைக் காகிதத்தில் பலவித அழகிய வர்ணங்கள் தீட்டி ஓர் உறைக்குள் மடித்து வைத்துக் கொண்டாள். சின்னப் பாப்பா வைத்து விளையாடுவதற்காக ஓர் ஓலைக் கிளுக்கு வர்ண ஓலையால் செய்து முடித்தாள். ஐந்து வயதுள்ள குண்டுத் தம்பி குண்டு விளையாடுவதில் விருப்ப முள்ளவனானபடியால், களிமண்

ணில் குண்டுகள் செய்து வர்ணம் பூசிக் காயவைத்து முடித்தாள். மூன்று வயதுப் பாப்பா மணலை அரிசி என்று அள்ளி விளையாடுவதற்காக ஒரு அழகிய ஓலைக் கொட்டான் தயாரித்தாள். மற்றப் பிள்ளைகளோடு பேசிக்கொண்டிருக்கும் நேரங்களிலேயே தன் மூத்த அத்தான் ராஜுவுக்காக ஓர் அழகிய கைக்குட்டை தைத்து அழகிய பூவேலை செய்து முடித்தாள். ஆனால் மற்றப் பிள்ளைகளோ முன்போலவே தாங்கள் பெறப்போகும வெகுமதிகளைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தார்களே தவிர, தாங்கள் ஏதாவது யாருக்காவது கொடுக்கவேண்டும என்று எண்ணவோ, பேசவோ இல்லை. லீலா எல்லாப் பொருள்களையும் செய்து முடிப்பதற்கும் விடுமுறை நாள் ஆரம்பிப்பதற்கும் சரியாய் இருந்தது. மறுநாள் காலை முதல் விடுமுறை ஆரம்பம். லீலா தான் தயாரித்த வெகுதிப் பொருட்களையெல்லாம் கவனமாகத் தன் பெட்டியின் அடியில் பத்திரமாக அடுக்கி வைத்துக்கொண்டாள்.

விடுமுறையில் வீடு செல்லும் சந்தோஷத்தில் அதற்கு முந்திய நாள் இரவில் பிள்ளைகள் தூங்கவே இல்லை. எப்போது விடியும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள் கிழக்கு வெளுத்தது லீலாவும் அவசரமாகச் சாப்பிட்டுவிட்டு அறையை நோக்கிப் போகும்போது அவளுடைய மாமா அவ்வளவு அதிகாலையிலே அவளை அழைத்துக் கொண்டுபோவதற்காக அங்கு வந்திருந்ததைக் கண்டதும் லீலாவுக்கு மட்டில்லாத மகிழ்ச்சியாயிருந்தது. மாமாவுக்குப் பல வேலைகளிருப்பதால் வரமுடியாதென்று லீலா நினைத்திருந்தாள். ஆனால் அவரோ வெள்ளி முளைத்ததுமே புறப்பட்டு இருட்டோடே வந்திருந்தார். வழிநெடுக லீலா அத்தையைப் பற்றியும், பிள்ளைகளைப்பற்றியும், மற்ற உறவினர்களைப்பற்றியுமே சந்தோஷமாக அளவளாவிப் பேசிக்கொண்டே நடந்தமையால் அவர்கள் நடந்து நடந்த 10 மைல் தூரமும் அவர்களுக்குக் கஷ்டமாகத் தெரியவில்லை.

வீட்டில் யாவரும் லீலாவின் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். சின்னப் பாப்பாவுக்குச் சுகவீனமாயிருந்தபடியால் இரவெல்லாம் தூக்கமில்லாதபடியால் அத்தை சோர்வுற்றிருந்ததைக் கண்ட லீலா, தான் நடந்து வந்த களைப்பையும் பாராமல் மிகவும் உற்சாகத்தோடு அத்தைக்கு உதவி செய்தாள்.

கிறிஸ்மஸ் வர இன்னும் ஒரு வாரம்தான் இருக்கிறது. வீட்டில் லீலாவுக்கு அதிக வேலை.

மறுநாள் பொழுது விடிந்தால் கிறிஸ்மஸ். லீலாவும், மற்ற பிள்ளைகளும் விடிவதற்கு முன்னமே எழுந்து ஒவ்வொருவரும்

ஆளுக்கொரு மெழுகுவர்த்திகளை எடுத்துக் கொண்டு மாமா, அத்தையுடன் இருட்டோடேயே கோவிலுக்குப் போனார்கள். அப்படியே கிராமத்திலிருந்த மற்றவர்களும் கோவிலுக்கு வந்தார்கள் எல்லாரும் தங்கள் மெழுகுவர்த்திகளைக் கொளுத்தி, மேடையிலும், பீடத்திலும், ஜன்னல்களிலும் வரிசையாய் வைத்தனர். ஆகா! எவ்வளவு அழகான காட்சி!! பரவசமான ஆராதனை பாடல்களுடன் நடந்தது. ஆராதனை முடிவதற்கும் கிழக்கில் சூரியன் உதிப்பதற்கும் சரியாய் இருந்தது. எல்லாரும் சந்தோஷத்தோடே வீட்டிற்கு அவசர அவசரமாய்ப் போனார்கள். லீலாவும் பிள்ளைகளுடன் வீடு சேர்ந்தாள்

இப்போதுதான் லீலாவுக்கு முக்கிய கட்டம். லீலா வீடு வந்ததும் தான் மற்றவர்களுக்காகக் கொடுப்பதற்காக தயாரித்து, யாருக்கும் தெரியாமல தன் பெட்டியின் அடியில் வைத்திருந்த வெகுமதிப் பொருள்களைத் தன் பெட்டியைத் திறந்து எடுத்தாள். சின்னப் பாப்பாவின் கையில் அழகிய கிலுக்கைக் கொடுத்தாள். அவன் அதை ஆட்டிச் சிரித்தான் சரோஜா அழகிய சிறு கொட்டானைப் பெற்றதும் ஆடிக் குதித்தாள். ராஜ் என்ற பையனுக்குப் பிரியமான குண்டுகள் கிடைத்ததும் அவைகளைச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டே சந்தோஷப் பட்டான். மூத்த அத்தானுக்கு அழகிய கைக்குட்டையைக் கொடுத்தாள். அவன் அன்போடு வாங்கிக்கொண்டு லீலாவை நன்றியுடன் பார்த்தது, லீலாவுக்கு அளவிலா ஆனந்தமாய் இருந்தது. அத்தைக்கு அழகிய விசிறியைக் கொடுத்தாள். அவர்கள் அது மிகவும் அழகாயிருந்தபடியால், கொஞ்ச நாளைக்கு அதை அழகாய் வைத்திருந்து பிறகு உபயோகிக்கலாம் என்று சுவற்றில் மாட்டினார்கள். மாமாவின் பைபிள் இப்போது அழகிய வர்ண அட்டைக்குள் அழகாய்த் தெரிந்தது. இவைகளை யெல்லாம் பார்த்து லீலா அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தன்னைப் பற்றியோ, தனக்கு வெகுமதி கிடைப்பதைப் பற்றியோ லீலா எண்ணவே இல்லை. மற்றவர்களுக்குக் கொடுப்பதின் மூலம் அவர்கள் அடையும் சந்தோஷத்தைக் காண்பதிலேயே லீலா எல்லையில்லா இன்பத்தைக் கண்டாள்.

பண்டிகை நாளுக்குத்தகுந்த சாப்பாடு ஏதோ சுமாராய் நடந்தது. கிறிஸ்மஸ் இரவில் எல்லாரும் ஜெபம் பண்ண உட்கார்ந்தனர் லீலாவின் பாபா லீலா பாடசாலையில் வாசிக்கக் கேட்டிருந்த, சாஸ்திரிகள் இயேசு பாப்பாவுக்கு காணிக்கைகள் படைத்து மகிழ்ச்சியடைந்த பாகத்தையே அன்றும வாசித்தார். வாசித்து முடிந்ததும் பிள்ளைகள் எல்லாரும் அமைதலாகவும் சந்தோஷமாகவும் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து மகிழ்ந்தார். சரோஜாவுக்கும் ராஜுவுக்கும் இடையில் இருந்த லீலாவை மாமா அன்புடனும் பரிவுடனும் பார்த்

தது லீலாவுக்கு மிகவும் சந்தோஷத்தைக் கொடுத்தது. திடீரென்று ஒரு வேடிக்கை நடந்தது !! அதாவது, சாஸ்திரிகள் இயேசுவுக்குக் காணிக்கைகளைப் படைத்தது போல லீலா சாஸ்திரி எங்களுக்கு இனும் தந்தாள் என்று தன் குண்டுகளை ஆட்டிக்கொண்டே கூறி விட்டான். எல்லாரும் கொல்லென்று சிரித்தார்கள். சரோஜா எழுந்து குதித்து ஆடிக்கொண்டே 'லீலா சாஸ்திரி லீலா சாஸ்திரி" என்று சத்தம் போட்டாள். லீலா இதைப்போன்று எப்போதுமே சந்தோஷம் அடைந்ததில்லை. கடைசியில் மாமா ஜெபம் செய்த போது லீலா உண்மையாகவே இயேசு பாப்பாவின் அருகில் இருப்பதாக உணர்ந்தாள்

விடுமுறை முடிந்தது. பாடசாலை திறந்து விட்டார்கள். லீலாவும் பாடசாலைக்குத் திரும்பினாள். எல்லாப் பிள்ளைகளும் தன்னைப்போல் கிறிஸ்மஸ் தினத்தன்று சந்தோஷமாயிருந்திருப்பார்கள் என்று நினைத்தாள். ஆனால் புஷ்டி சுசீலா பண்டிகையில் பட்சணங்கள் மிதமிஞ்சி சாப்பிட்டதால் லீவெல்லாம் சவ்வரிசி சாப்பிட்டு மெலிந்ததாக சலித்தாள். மேரி தங்க வளையல் கிடையாமல் தவித்து ஏமாந்தேன் என ஓலமிட்டாள். ஜெயமணி பட்டுப் புடவைக்குப்பதிலாய் பதில் வெட்டுப்புடவை கிடைத்ததாக உறுமினாள்.

ஆனால் லீலாவின் கண்களில் மட்டும் அவள் கிறிஸ்மஸ் தினத்தன்று அடைந்த மகிழ்ச்சியின் நிறைவு இன்னும் பிரகாசித்துக் கொண்டிருந்தது அவள் மனம் சாஸ்திரிகள் இயேசு பாப்பாவுக்குக் காணிக்கை படைத்து மகிழ்ச்சியடைந்தது போலத், தானும எப்போதும் எந்தக் கிறிஸ்மஸ் காலத்திலும பிறருக்கு ஏதாவதுகொடுத்து அதன்மூலம் சந்தோஷத்தையும் ஆறுதலையும அடைவேன் என்ற பெருமிதத்தால் நிறைந்திருந்தது.

கிறிஸ்மஸ் தியாகம்

(கனம் தவமணி ஐயர், மண்டபம் கேம்பு)

2 கொரி. 8: 9 " நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே ; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே "

எவ்விதம் ?

" அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாய

வானார்" (பிலி. 2 : 6, 7) ஆ! என்ன அதிசயம்! என்ன அன்பு! நம்மை ஐசுவரியவான்களாக்கும்படிக்கு! ஆ என்ன கிருபை.

"திரு அவதாரமே" இயேசுக்கிறிஸ்துவின் கிருபைதான். அவர் பிறந்தபோது "தேவகிருபை பிரசன்னமாயிற்று" (தீத்து 2:11) தேவதூதர்களையல்ல, நீதிமான்களையுமல்ல, பாவிகளை இரட்சிக்க அவர் உலகத்தில் வந்தார். "பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும அவர்களைப் போல் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்." (எபி. 2 : 14) தம்மைத் தாமே வெறுமையாக்கி மனுஷனானார், ஒப்பற்ற தாழ்மை! ஒப்பற்ற சுயவெறுப்பு !!

"அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும்"! அவரின் ஐசுவரியமென்ன? "அநாதி தேவன்" (உபா. 33 : 27) "நித்திய வாசி" (ஏசா. 57 : 5 "தேவனுடைய ரூபம்" (பிலி. 26) "அவருடைய மகிமையின் பிரகாசம்" (எபி. 1 : 3) "அவருடைய தன்மையின் சொரூபம்" (எபி. 13) சர்வத்தையும் உண்டாக்கினவர், சர்வத்துக்கும் சுதந்தரவாளி சர்வத்தையும் தமது வசனத்தால் தாங்குகிறவர் (எபி. 1:3) சகல ஜீவன்களுக்கும் ஆகாரங் கொடுக்கிறவர். விசுவாசிகளை ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும் நிரப்புகிறவர் (எபே. 1 3) "இந்த மகிமையின் தேவன்" (அப். 7.2) ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா, நமக்காகவும் நமக்கு இரட்சிப்புண்டாகவும் பரமண்டலத்திலிருந்து இறங்கி, ஏழைக் கன்னிகையின் வயிற்றில் அவதரித்து மனுஷனானார்—தரித்திரரானார்! சொல்லிமுடியாத கிருபை :—நம் நிமித்தம தரித்திரரானாரே! அவருடைய தரித்திரத்தைப்பாருங்கள்! பிறப்பில் தரித்திரம்—சத்திரத்திலும் இடமில்லை. கந்தைகளால் சுற்றப்பட்டார். ஏழைத் தச்சனின் குமாரனாக வளர்ந்தார். தலைசாய்க்க இடமில்லாதிருந்தார். பசியோடும் தாகத்தோடும் அலைந்தார். கலிலேயாக் கடலில் படகு இரவல் எருசலேமுக்குப் பவனிபோனபோது வாகனம் இரவல்; பஸ்காவை ஆசரித்த மேல் வீட்டறை இரவல், மரித்து அடக்கம் பண்ணப்பட்ட கல்லறை இரவல். முன்னணை முதல் கல்லறை மட்டும் தரித்திரமே எதற்காக? நம்மை ஐசுவரியவான்களாக்கும்படிக்கே! நம்மைப் பரலோகஞ் சேர்க்க அவர் பூலோகம் வந்தார். நம்மை இரட்சிப்பின் வஸ்திரங்களால் அலங்கரிக்க அவர் கந்தைகளை அணிந்தார். நாம் தூதர்களோடு துதியின் கீதம்பாட, அவர் ஆக்களின் சத்தத்துக்குள் அழுது பிறந்தார். நம்மை தேவபுத்திரராக்க, அவர் மனுப்புத்திரனானார். சொல்லி முடியாத கிருபையின் ஐசுவரியம.

ஆத்துமாவே! அவருடைய அன்பையும், தாழ்மையையும் சுயவெறுப்பையும் பார்! அவர் உன் ஆண்டவர்: அவரைப் பணிந்துகொள். அவர் உன் இரட்சகர்: அவரை ஸ்தோத்திரி அவருடைய

தாழ்மையை உன் கிறிஸ்மஸ் உடுப்பாகத் தரித்துக்கொள் : அவர் காட்டின சுயவெறுப்பை இக் கிறிஸ்மஸ் காலத்தில் விசேஷமாக மற்றவர்களுக்குக் காட்டி, அவர்களை மகிழ்ச்சியாக்கு, அப்பொழுது கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழ்வாய்.

நவ வருடத் தியானம்

(கனம் தவமணி ஐயர், மண்டபம் கேம்பு)

எபி. 13 : 5 "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை,

உன்னைக் கைவிடுவதுமில்லை"

இப்புதுவருஷம் எனக்கும், என்குடும்பத்திற்கும் எப்படிப் பட்டதாயிருக்குமோ? என்று நீ கலங்குகிறாயோ? கலங்காதே! திகையாதே! இப்புதுவருஷத்தைக் கிருபையாகத் தந்த உன் ஆண்டவரே, இந்த ஆறுதலும் ஆசீர்வாதமுமான வாக்குத்தத்தத்தையும் உனக்குத் தருகிறார். அவர் உண்மையுள்ளவர்.

"விலகுவதுமில்லை" என்பது அவருடைய பிரசன்னத்தையும்,

"கைவிடுவதில்லை" என்பது அவருடைய சமய சகாயத்தையும் குறிக்கும்.

இப்புதுவருஷத்தில் தமது மகிமையின் பிரசன்னத்தால் உன்னை நடத்தி, தமதன்பின் சமூகத்தால் உன்னை ஆதரிப்பார். இதற்குமேல் உனக்கு வேண்டுவதென்ன?

இவ்வினிய வாக்கைப் பெற்றுக் கொண்டவர்களைப்பற்றி, சிறிது சிந்திப்போம்.

1. கோத்திரப் பிதாவாகிய யாக்கோபு (ஆதி. 28 : 16)

யாக்கோபின் வாழ்க்கையில் பல குறைபாடுகள் உண்டு, என்றாலும் அவன் தேவனைத் தேடினவன் (ஆதி. 28) ஜெபத்தில் அவரோடு போராடினவன் (ஆதி. 32) என்பதை நாம் மறக்கலாகாது. பெத்தேலிலும், பெனியேலிலும் அவனைப் பாருங்கள். ஏசாவுக்குப் பயந்து பெற்றோரைவிட்டுப் பிரிந்து ஓடிப்போன இரவில், (பெத்தேலில்) பயத்தோடும், திகிலோடும் படுத்திருந்தபோது, அவன் அவரைத்தேடினான். அங்கே அவர் அவனுக்கு இந்த அருமையான வாக்கை அருளினார். பெனியேலில் (திரும்பும் பிரயாணத்தில்) ஏசாவால் என்ன நேரிடுமோ என்றபயத்தில் தனித்திருந்து ஜெபத்தில் போராடினபோது 'அங்கே அவனை ஆசீர்வதித்தார்' அவனை 'தெய்வபிரபு' ஆக்கினார்.

2. கர்த்தருடைய தாசனாகிய யோசுவா. (யோசு. 1.5)

இஸ்ரவேலை 40 வருஷமாய் நடத்தின மோசே மரித்துப் போனான். யோர்தானைக்கடந்து, கானானின் பலத்த ஜாதிகளை ஜெயித்து அதை சுதந்தரிக்க வேண்டிய பொறுப்பானவேலை யோசுவாவின்மேல் விழுந்தது. யோசுவா, மோசையைப்போல் எகிப்தின் சகல சாஸ்திரங்களையுங் கற்றறிந்தவனல்ல என்றாலும் ஒரு பலத்த விசுவாசி கானானை வேவுபார்த்து நற்செய்திசொன்ன இருவரில் ஒருவன். சுயபலத்தால் அல்ல, கர்த்தருடைய சகாயத்தால் கானானை ஜெயித்துவிடலாம் என்ற நம்பிக்கைகொண்ட விசுவாசி. சுயபலத்தைச் சாராமல், கர்த்தருடைய பலத்தைச் சார்ந்து அவரைத் தஞ்சமாகக் கொண்ட அவனுக்கு இவ்வருமையான வாக்கு அருளப்பட்டது.

3. ராஜாவாகிய சாலமோன் (1 நாளா. 28 : 20)

சாலமோன் சிறுவயதில் ராஜ்யபாரத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று, ஆளவேண்டிய ஜனத்தின்தொகையோ அதிகம். சாலமோன் தன் பெலவீனத்தை உணர்ந்து கர்த்தருடைய சகாயத்தை நாடினான். ஞானத்திற்காக ஜெபித்தான். (1 ரா 3:9) கர்த்தர் அவன் விரும்பினதிலும் அதிகமாய்க்கொடுத்தார். (1 ரா. 3, 12:14) அவனுடைய தகப்பனாகிய தாவீதின் மூலமாய் இந்த நல்வாக்கை அருளினார். அளவில்லா ஞானத்தையும் ஐசுவரியத்தையும் நீடிய ஆயுளையும் அருளினார்.

4. எபிரேயக் கிறிஸ்தவர்கள். (எபி 13.5)

துன்பப்பட்ட யூதக்கிறிஸ்தவர்களுக்கு ஆறுதலாக இந்த அருமையான வாக்கு அருளப்பட்டது, துன்பத்தினால் சோர்ந்து போயிருக்கிற ஆத்துமாவே! இந்தவாக்கு உனக்கும் உரியது (ஏசாயா 49 14) "ஸ்திரீயானவள் . . . . தன் பாலகனை மறந்தாலும் நான் உன்னைமறப்பதில்லை" (ஏசாயா 49:15) ஒருவேளை உன் வறுமையை நினைத்து வருந்துகிறாயோ! (எபி. 13:5) நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே " அதினாலே நாம் தைரியங்கொண்டு கர்த்தர் எனக்கு சகாயர் நான் பயப்படேன் .. ..." (எபி. 13:6) என்று சொல்லிக்கொண்டு இப்புதுவருஷத்திற்குள் பிரவேசிப்போமாக.

இயேசுவின் ஜெபப்பள்ளி

பதினான்காம் பாடம்.

"நீங்கள் நின்று ஜெபம்பண்ணும்போது, மன்னியுங்கள்"

அல்லது

ஜெபமும் அன்பும்

'நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்போது, ஒருவன் பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்'

(மாற்கு 11 : 25)

"நீங்கள் எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ அவைகளைப் பெற்றுக்கொண்டோம் என்று விசுவாசியுங்கள். அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்" என்ற ஜெபத்தின் மகா வாக்குத்தத்தத்திற்குப் பிறகுதான் இவ்வசனம் வருகிறது. அவ்வாக்குத்தத்தத்திற்கு முந்திய 'தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்! என்பதைப்பற்றி ஏற்கனவே பன்னிரண்டாம் பாடத்தில் படித்திருக்கின்றோம். அதிலே கடவுளோடு ஜெபத்தில் நாம் கொள்ளும் சம்பந்தத்தைப் பொருத்தே எல்லாம் இருக்கும் என்று கற்றோம். அதைத் தொடர்ந்துவரும் இந்த வசனம் மனித சகோதரரோடு நாம் கொள்ளும் தொடர்பு வெகு தெளிவாயிருக்கவேண்டும் என்பதை வற்புறுத்துகிறது. காணாத கடவுள் மீது அன்பும், காண்கிற மக்கள் மீது அன்பும் இணைபிரியாதவை ஒருபுறம் கடவுளோடு சரியாயில்லாத இருதயத்திலிருந்து வரும் ஜெபமும், மறுபுறம் மனிதரோடு சரியாயில்லாத இருதயத்திலிருந்துவரும் ஜெபமும் பயன்படா. கடவுள் மீதுள்ள விசுவாசமும் மக்கள் மீதுள்ள அன்பும் ஒன்றுக்கொன்று முக்கியமானவை.

இக்கருத்தினையே ஆண்டவர் அடிக்கடி வற்புறுத்தியிருக்கின்றனர். மலைப்பிரசங்கத்தில், ஆறும் கற்பனையைப்பற்றி பேசும்போது மனிதர் சகோதரரோடு ஐக்கியம் இல்லாத ஒருவனுடைய வழிபாடு கடவுளுக்கு ஏற்காது என்றார்.

'ஆகையால் நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து' (மத்தேயு 5 : 23-24) அதன் பின் ஜெபம்பண்ண வேண்டிய விதத்தைப்பற்றி போதித்ததில், 'எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் கடன்களை எங்

களுக்கு மன்னியும்' என்று கற்பித்தபிறகு ஜெபத்தின் முடிவில் 'மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பரமபிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்' என்று சேர்த்துக் கூறினார். இரக்கமற்ற ஊழியக்காரனைப் பற்றிய உவமையின் முடிவில் நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற் போனால், என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்' (மத். 18 : 35) அவ்விதமே இங்கேயும், பட்டுப்போன அத்திமரத்தின் அருகில், விசுவாசத்தின் வல்லமையைப்பற்றியும், விசுவாசமுள்ள ஜெபத்தைப் பற்றிப் பேசினபோது, உடனே யாதொரு தொடர்புமில்லாமல், 'நீங்கள் நின்று ஜெபம்பண்ணும் போது, ஒருவன் பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்' என்ற கருத்தை எடுத்துரைக்கிறார். ஜெபஜீவியமுள்ளவர்களின் பெரிய பாவம் என்னவென்றால் சகோதர மனிதர் மீதன்புகூறவேண்டும என்ற பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாமையேயாம். அவர்கள் ஜெபம் வல்லமையற்றதாயிருப்பதற்கு முக்கிய காரணமும் மக்கள்மீதன்பு கூராததேயாம். கடவுள் அன்புகூருகிற மக்கள்மீது அன்பும் இரக்கமும் காட்டும் உணர்ச்சியே விசுவாசத்தை வளரச் செய்யும்.

மன்னிக்கும் சுபாவம் தேவைஎன்றே இங்கு ஆண்டவர் கற்பிக்கும் முதற்பாடம். 'நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்களுக்கு மன்னியும்' என்று ஜெபிக்கிறோம். 'கிறிஸ்துவுக்குள் தேவன் மன்னித்திருக்கிறதுபோலவே ஒருவரையொருவர் மன்னியுங்கள்' என்று வேதம் போதிக்கிறது. கடவுள் நிறைவாக, இலவசமாக மன்னிப்பு அருள்கிறார். இதுவே நாம் மக்களோடு கொள்ளும் தொடர்பிற்கும் பிரமாணமாயிருக்கவேண்டும். அப்படியில்லாமல், அரை மனதோடும், வேண்டாவிருப்பமாகவும் நாம் பிறருக்கு அருளும் மன்னிப்பே, கடவுள் நமக்கருளும் மன்னிப்பிற்கு அளவையும் பிரமாணமுமாகும் கடவுளுடைய மன்னிக்கும் இரக்கத்தின்மீதே ஒவ்வொரு ஜெபமும் நிலைத்திருக்கிறது. நமது பாவங்களுக்குத் தக்கபடி நமக்குத் தீர்ப்புச் செய்யக் கடவுள் தொடங்கினால் நமது ஜெபத்தினாலாகும் பயன் என்ன? கடவுளின் அன்பிற்கும் மன்னிப்பிற்கும் கதவைத் திறக்கும் திறவுகோல் நமது மன்னிப்பேயாகும். கடவுள் நமது பாவங்களை மன்னித்திருப்பதால்தான் நாம் கேட்பதை ஜெபத்தின் மூலம் பெறமுடிகிறது. ஜெபத்திற்குப் பதில் பெறுவதற்கு நிச்சயமான ஆதாரம் கடவுளின் மன்னிக்கும் அன்பே. இது நம்மை ஆண்டு கொள்ளும்போதுதான், நாம் விசுவாசத்தோடு ஜெபிக்கமுடியும். அப்போதுதான் நாம் அன்பு நெறியில் வாழ்கிறோம். நம்மீது

அன்புகூர்வதில் வெளிப்படும் கடவுளின் மன்னிக்கும் சுபாவமே நமது சுபாபமாகிறது. அப்போது தான் அவர் மன்னிப்பதுபோல நாமும் மன்னிக்கிறோம் சாதாரணமாக ஒரு பெரும் துக்கத்தை தருகிற அநீதியாவது, புண்படுத்தலாவது நமக்கு நேர்ந்தால், கடவுள்போல் மன்னிக்கும் சுபாவத்தையடைய நாம் நாடுகிறோம். ஏன்? நமதுரிமைகளைக் காக்கவும், காயப்பட்ட நமது மதிப்பைக் காக்கவுமே அவ்வாறு செய்கிறோம். தினசரி வாழ்க்கையின் சின்னஞ்சிறு தொல்லைகளில் பிறரில் தோன்றும் முன்கோபம், கடுஞ்சொல் அல்லது சுடுசொல், திடீர் தீர்ப்பு முதலிய குற்றங்களை நாம் மன்னிப்பதில்லை. ஏனெனில் நாம் தீங்கு செய்ய நினைக்கிற தில்லை என்கிறோம். நம் கோபம் நீடித்திருப்பதில்லை யென்கிறோம். கடவுளிடத்திலும், கிறிஸ்துவினிடத்திலும் இருக்கும் மன்னிக்கும் சுபாவத்தை, பலவீன மனிதராகிய நாமும் கொள்வது இயலாத காரியம் என்றும் சாந்திசெய்துகொள்ளுகிறோம். இதுவா மன்னிக்கும் சுபாவம்? இல்லவே இல்லை 'கிறிஸ்து மன்னித்ததுபோல நீங்களும் மன்னியுங்கள்' சாவுக்குரிய காரியங்களிலிருந்து மனச்சாட்சியை சுத்திகரிக்கும் இயேசுவின் இரத்தம், அதனைத் தன்னயத்திலிருந்தும் சுத்திகரிக்கிறது. அது வெளிப்படுத்தும் அன்பு, மன்னிக்கும் அன்பு, அது நம்மில் நிறைந்து, பிறருக்கு நம்மூலம் வழிந்தோடுகிறது. 'அருளொளி அன்பே யுறைந்து, அதிகவுயர்வாய் வளர்ந்து, அகமுழுதுமே நிறைந்து வழிந்தோடும்'. மனிதருக்கு நாம் காட்டுகிற மன்னிக்கும் அன்பே நமக்குள்ளிருக்கும் கடவுளுடைய மன்னிக்கும் அன்பிற்கு ரூபகாரம். ஆகையால் விசுவாசமுள்ள ஜெபத்திற்குள்ள ஒரு நிபந்தனை மன்னிக்கும அன்பு.

மேலும் அவர் போதிக்கும் மற்றொரு பொதுப் பாடம் யாதெனில், நாம் ஜெபத்தின்மூலம் கடவுளோடு கொள்ளும் ஐக்கியம் எப்படிப்பட்டது என்பதை நமது தினசரி உலக வாழ்வை வெளிப்படுத்தும் வாழ்க்கை முழுமையானது. ஜெபவேளையில் ஒருவித வாழ்க்கையும் பிறவேளைகளில் வேறுவித வாழ்க்கையும் இருக்கமுடியாது. ஜெப நேரம் நமது தினசரி வாழ்வில் ஒரு சிறு பகுதியேயாகும். ஜெப வேளையில் நான் எப்படிப்பட்ட சிந்தையுடையவன் என்பதைக் கொண்டல்ல. அந்நாள் முழுவதிலும் நான் நடத்தும் வாழ்க்கையின் தன்மையைக்கொண்டே என்னையும் என் விருப்பங்களையும் கடவுள் மதிப்பிடுகிறார். மக்களோடும், உலகோடும் நான் கொள்ளும் தொடர்போடு, கடவுளை நான் நெருங்குவதை ஒப்பிடும்போது இது ஒரு சிறு பகுதியேயாகும். மக்களோடும் உலகோடும் எனது தொடர்பு வெற்றியுள்ளதாயிருந்தால் கடவுளோடு கொள்ளும் எனது தொடர்பும் வெற்றியுடையதாகும். முன்னையதில் தோல்வியுற்றால்

பின்னையதிலும் தோல்வியுறுவேன் எனக்கும் பிறருக்கும் இடையே யுள்ள தவறுகளைப்பற்றிய தெளிவான உணர்ச்சிமட்டும் அல்ல. சாதாரணமாக நான் செய்யும் தவருன சிந்தனையும், பேச்சும் செயலும், தீர்ப்பும் என்னையறியாமலே எனக்குள் இடம்பெற விடுவேனுயினும் அவை என் ஜெபத்திற்கு இடையூருய் நிற்கும். கடவுள் அன்பிற்கும் கடவுள் சித்தத்திற்கும் ஒப்புக்கொடுக்கப்பட்ட என் வாழ்க்கையிலிருந்தே விசுவாசமுள்ள ஜெபத்தின் வல்லமை பிறக்கும். நான் ஜெபிக்கும் போதிருக்கும் எனது நிலைமையைக் கொண்டல்ல. ஜெபிக்காதபோது நான் எப்படியிருக்கிறேன் என்பதைக் கொண்டே கடவுள் என் ஜெபத்தை மதிப்பிடுகிருர்.

இக்கருத்துக்களைக்கொண்டு வேருெரு பாடமும் கற்கலாம். மக்களோடு தொடர்புகொண்டுள்ள நமது வாழ்க்கையில் சகலமும் அன்பையே பொருததிருக்கும். மன்னிக்கும ஆவியே அன்பின் ஆவி. கடவுள் அன்பாயிருக்கிருர். ஆகையால் மன்னிக்கிருர். நான் அன்புநெறியினை வாழ்க்கையின் அறநெறியாகக்கொண்டு வாழும்போதுதான், கடவுள் மன்னிக்கிறதுபோல நானும் மன்னிக்க முடியும். மக்கள்மீதன்புகூருமபோதே கடவுள்மீதன்புகூருகிருேம் என்று சொல்லமுடியும் 1 யோவா. 4 : 20, 3 : 18 21, 23 காண்க. கிரியையினுலும் உண்மையினுலும அன்புகூரக்கடவோம். இதனுலே, நம்முடைய இருதயத்தை அவருக்கு முன்பாக நிச்சயப்படுத்திக் கொள்ளலாம். நம்முடைய இருதயம நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால், நாம் தேவனிடத்தில் தைரியங்கொண்டிருந்து, நாம் வேண்டிக்கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக் கொள்ளுகிருேம். நமக்குள் அன்பு இல்லாவிட்டால் நமது விசுவாசத்தாலும், நமது கிரியையினுலும் நமக்கு இலாபம் இல்லை. கடவுளோடு நம்மை ஐக்கியப்படுத்துவதும் அன்பே நமது விசுவாசத்தை மெய்ப்பிப்பதும் அன்பே.

'கடவுளிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்' (மாற்கு 11 : 24) என்பது எவ்வளவு முக்கியமானதோ 'மனிதரில் அன்பாயிருங்கள்' என்பதும் அவ்வளவு முக்கியமானது. எனக்கு அப்பாலுள்ள உயிருள்ள தேவனோடு எனக்குள்ள சரியான தொடர்பு என்னைச் சுற்றியுள்ள உயிருள்ள மக்களோடு எனக்கிருக்கும் சரியான தொடர்பு ஆகிய இரண்டுமே வல்லமையுள்ள ஜெபத்திற்குரிய நிபந்தனைகள்.

மக்களுக்காக நாம் உழைக்கும்போதும், மக்களுக்காகநாம் ஜெபிக்கும்போதும் இந்த அன்பு விசேஷமானது. சில சமயங்களில், வைராக்கியத்தின் காரணமாக அல்லது நமது சுய ஆன்ம ஈடேற்றத்திற்காக நம்மைக் கிறிஸ்துவின் திருப்பணிக்கு ஒப்புக்கொடுக்கிருேம்.

ஆனால் எந்த ஆத்துமாக்களைத் தேடுகிறோமோ அந்த ஆத்துமாக்களுக்காக நமது தியாகம் செய்யும் அன்பினை ஒப்புக்கொடுப்பதில்லை இது விந்தையன்றோ? நமது விசுவாசம் பலவீனமானது, வெற்றி பெறவியலாதது என்பது வாஸ்தவம்தான். ஆனால் எள்ளளவும நமது அன்புக்குப் பாத்திரனல்லாத பொல்லாத ஒருவனை, காணமற் போன ஆட்டைத் தேடியலையும் பரம மேய்ப்பனை இயேசுவின் அன்போடு நோக்குவதும், கிறிஸ்து இயேசுவை அவனிலே காண்பதும, அவனை அவருக்காகத் தோளில் தூக்குவதுமாகிய இத்திருப்பணியே விசுவாசமுள்ள ஜெபத்தின் இரகசியமும் வெற்றியுமாகும். இயேசு மன்னிப்பைப்பற்றி பேசும்போது, அன்பினை அதன் வேறாகப் பேசுகிறார். அன்பு நெறியினை அறநெறியாகக்கொண்ட கிறிஸ்தவ வாழ்க்கையே விசுவாசமுள்ள ஜெபத்தின் நிபந்தனை மலைப் பிரசங்கத்தில் மத். 5 : 7, 9, 22, 38-48 முதலிய பகுதிகளில் ஆண்டவர் ஜெபத்தைப்பற்றிய போதனையையும், வாக்குத்தத்தத்தையும் இரக்கத்தோடு தொடர்புபடுத்தியிருப்பதை ஊன்றித் தியாகம் செய்க.

விசுவாசமுள்ள ஜெபத்தைப்போல இருதயத்தை ஆராய்வது வேறொன்றுமில்லை. கடவுளுக்குமட்டும் தெரிந்த காரணங்களினால் அவர் நமது ஜெபங்களைக் கேளார் என்று எண்ணுதிருப்போமாக. ‘நீங்கள் தகாதவிதமாய் ஜெபிப்பதனாலேயே ஜெபித்தும் பெற்றுக் கொள்ளாதிருக்கிறீர்கள்’ என்ற இந்த வசனம் நம்மை ஆராய்வதாக கடவுளுடைய திருச்சித்தத்திற்கும் சகோதர மனிதரில் அன்புகூர்வதற்கும் நமது வாழ்க்கையை ஒப்புக்கொடுத்திருக்கிறோமா என்பதை வெளிப்படுத்துவதாக நமது ஜெபமிருக்கிறதா? என்று நம்மைக் கேட்போமாக. அன்பு என்ற ஒரே நிலத்தில்தான் விசுவாசம் வேரூன்றித்தழைக்கும். விசுவாசம் தனது கரங்களை உயர்த்தித் தனது இருதயத்தை வானத்தை நோக்கித் திறக்கும்போது, எப்பொழுதும பரமபிதா, தீயவருக்கும் தகுதியற்றவருக்கும் அது பயன்படுகிறதா என்று நோக்குகிறார் முற்றும் வெற்றி பெற்ற அன்பில் அல்ல, குறிப்பான நோக்கத்திலும் உண்மையான கீழ்ப்படிதலிலுமே விசுவாசம தான் விரும்பும ஆசியைப் பெறமுடியும். கடவுளின் அன்பு தன்னில் வாழும்படி இடங்கொடுப்பவனும், கடவுள் நேசிப்பதுபோலவே தினசரி வாழ்வில் மக்களை நேசிப்பவனுமே தனது ஜெபம் கேட்கப்படும் என்று விசுவாசிக்கும் வல்லமையைப் பெறுகிறான். சிங்காசனத்தின் மத்தியில் இருக்கும் ஆட்டுக்குட்டியானவர்போல துன்புறுகிற, மன்னிக்கிற அன்பே ஜெபத்தில் வெற்றி பெறும். இரக்கமுள்ளவர் இரக்கம் பெறுவர், சாந்தகுணமுள்ளவர்கள் தரணி ஆளுவர்.

வேத விஞக்களுக்கு விடை.

1 யோவாஸ் 11 ராஜா 11 : 1-3
2 யோகபேத் எண்ணு 26 : 59
3 ஆபிரகாம், தாவீது, சாலமோன்—மத். 1 : 1-16
4 உசியா ராஜா—11 நாளாகமம் 26 : 10
5 1, 11 தெசலோனிக்கேயர்—பிலிப்பியர்
6 அப்போஸ்தலனுகிய யோவான்
7 பெலிஸ்தியர் 1 சாமு. 5 : 1
8 மனுசே
9 கொரிந்து பட்டணத்திலுள்ள சபைக்கு
10 1, 11 நாளாகமங்கள்.
11 எருசலேம்—ஏசாயா 1 : 1
12 எஸ்தர்—அத்சாள்—எஸ்தர் 2 : 7

நான் யார்? (விடை)

கவனிப்பு :—கொடுக்கப்பட்டிருக்கும் வார்த்தையில் காணும் எழுத்துக்களை எடுத்து இலக்கப்படி அடுக்கிப் பாருங்கள்.

1.	கில்கால் —	(நம்பர் 1)	கி
2.	மறி	(,, 2)	றி
3.	பெதஸ்தா	(,, 3)	ஸ்
4.	தமஸ்கு	(,, 2, 3)	மஸ்
5	புலஸ்தீனு —	(,, 1)	ப
6	வண்டி	(,, 2, 3)	ண்டி
7	கால் இல்லை கை	—	கை

விடை : கிறிஸ்மஸ் பண்டிகை

கிறிஸ்து ஜயந்தி நடிப்பு

(நவம்பர் மீ த் தொடர்ச்சி)

ஆரோன் நீங்களும் ஒரு ராஜாவா?

காஸ்பார் (காது கேட்காமல்) என்னடா!

ஆரோன் (பெரிய சத்தத்தோடு) நீங்களும் ஒரு ராஜாவா?

காஸ்பார் ஆம். ஆம். நானும் ஒரு ராஜா.

ஆரோன் (கிளியைக் காண்பித்து) அது என்ன?

காஸ்பார் எ! எ!

ஆரோன் அது என்ன?

காஸ்பார் அது ஒரு கிளி.

ஆரோன் அது பேசுமா?

காஸ்பார் எனக்கு எப்படித் தெரியும்?

ஆரோன் அது கடிக்குமா?

காஸ்பார் ஆம், கடிக்கும். இதைப் பாரு.

ஆரோன் (நகைப் பெட்டியைக் காட்டி) அப்போ இதென்ன?

காஸ்பார் (அதிக சந்தோஷத்தோடு பெட்டியைத் திறந்து அநேக நகைகளைக் காண்பிக்கிறார்) இது என் பெட்டி. நான் எங்கே போனாலும் கொண்டுபோவேன். இவைகள் எல்லாம் கற்கள்

இது வைடூரியம்—இது இருந்தால் மோசம் வராது. இது நீலக்கல்—இதிருந்தால் நல்ல தூக்கம் வரும். இது சிவந்த பவளம்—காயங்களைச் சுகப்படுத்தும். அப்புறம் வச்சிரக்கல் வைத்திருக்கிறேன். அதைக்கொண்டு தண்ணீரைக் கண்டு பிடிக்கலாம்.

நீலக்கல் தெரியுமா? இது கண்களுக்குப் போட்டால் வலி வராது.

அப்பொழுது முத்துக்கல்—இது இருந்தால் இடி இடித்தாலும் மோசம் இல்லை.

இது என் பெட்டி. இங்கே இருக்கிற என் மணிகளோடு விளையாடுகிறேன்.

கடைசி மூலையில் மிட்டாய் வைத்துக்கொள்ளுகிறேன். ஓ-ஓ இது நல்ல மிட்டாய். இங்கே தம்பி கொஞ்சம் எடு.

(ஆரோன் அதை எடுத்துத் தின்றுகொண்டிருந்தபொழுது தாய் திரும்ப வந்து அவனைப் பார்த்து)

தாய் மகனே, தொந்தரவு செய்யாதே என்று நான் சொல்லவில்லையா?

ஆரோன் அது என் தப்பு அல்ல. என்னிடத்தில் அநேக கேள்விகளைக் கேட்டார்கள்

தாய் இப்போ போய் மற்ற மேய்ப்பர்களைக் கூப்பிடு. யார் இங்கே வந்திருக்கிறது என்று சொல்லு. அவர்கள் வீட்டிலிருக்கிற தின்பண்டங்களையெல்லாம் கொண்டுவரச சொல்லு சீக்கிரம் ஓடிப்போ !

ஆரோன் நல்லது அம்மா! போகிறேன்.

(தாய் நெருப்புப் போடப் போகும்பொழுது ராஜாக்கள் கொண்டுவந்த நகைகளைப் பார்த்து அவளும் கிட்டவந்து நின்று)

தாய் என்ன ஆச்சரியமான நகைகள். அந்தப் பொன் கூட பாருங்கள்.

மெல்கியோர் இவைகள் எல்லாம் குழந்தைகளுக்குக் கொண்டுபோகிற வெகுமதிகள்.

தாய் குழந்தையா? என்ன குழந்தை ?

மெல்கியோர் எங்களுக்குத் தெரியாது. ஆனால் அந்த நட்சத்திரம் எங்களை நடத்தி வழியைக் காட்டியருளும்.

தாய் ஒருவேளை எனக்குத் தெரியும். எதைப்போல இருக்கும் ?

மெல்கியோர் அந்தப் பிள்ளையின் கண்களில் அன்பு தெரியும். கைகள் ஒரு ராஜாவின் கைகள். அந்தப் பிள்ளைக்குப் பொன்னையும் வெள்ளைப்போளத்தையும் தூபவர்க்கத்தையும் கொண்டுபோகிறோம். கிழக்கில் பிரகாசிக்கிற நட்சத்திரம் எங்களின் வழிகாட்டி.

தாய் (தனக்குள்) ஐயோ! என் பிள்ளை அப்படிப்பட்ட பிள்ளை தரித்திரத்தில் பட்டினியாயிருந்தாலும் யார் பொன்னையும், தூபவர்க்கத்தையும், வெள்ளைப்போளத்தையும் என் அருமை மகனுக்குக் கொண்டுவருவார்கள்

(அதே நேரத்தில் ஆடு மேய்க்கிற ஜனங்களின் பாட்டுச் சத்தம் கேட்கிறது. தாய் கதவைத் திறந்து வெளியே பார்க்கிறாள். ஆரோன் ஒரு பெரிய கூட்டத்தை நடத்திக்கொண்டு வருகிறான். எல்லாரும் கிட்டத்தில் வந்து சம்பாஷித்துக் கொண்டேயிருக்கிறார்கள். திடீரென்று ராஜாக்களைப் பார்த்துப் பேசாமலிருக்கிறார்கள். அப்புறம் ஒரு மேய்ப்பன் முன்னே நின்று ஒரு தட்டிலே நேர்த்தியான பழங்களைக் காட்டிக்கொடுக்கிறான். அதிலே எலுமிச்சை, ஆரஞ்சு கஸ்தூரி, மாதுளை, அத்தி, அன்னாசி முதலிய பழங்களிருந்தன.

மேய்ப்பர்கள் ராஜாக்களே, இவ்வளவுதான் நாங்கள் கொண்டுவர முடியும். தயவுசெய்து இந்தப் பழங்களையெல்லாம் ஏற்றுக் கொண்டு சாப்பிடுங்கள்.

ராஜாக்கள் நாங்கள் அதிக நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்.

தாய் இப்பொழுது பெண்களும் பையன்களும் கோலாட்டத்தை காட்டிப் பாடுங்கள் மகனே நீ உன்னுடைய குழலை ஊது சந்தோஷமாயிருப்போம்

(வாலிபர்கள் முதலாவது கொஞ்சம் பயப்பட்டாலும் வர வர அதிகச் சந்தோஷத்தோடும் தைரியத்தோடும் எல்லா விதமான ஆட்டங்களையும் காட்டுகிறார்கள்)

பெல்தாசார் சிநேகிதர்களே, நீங்கள் எவ்வளவோ சந்தோஷத்தோடு எங்களை உபசரித்தீர்கள் நாங்கள் நன்றியறிதலோடே உங்களை ஸ்தோத்தரிக்கின்றோம். இப்பொழுது தூங்கக் கொஞ்சம் நேரம் உண்டு. அப்பொழுது நாங்கள் இன்னும் நீண்ட பிரயாணம் பண்ணவேண்டும். போய்விட்டு வாருங்கள்! (எல்லாரும் போகிறார்கள்)

(ஆரோன் தாய்க்குத் தெரியாமல் காஸ்பார் ராஜாகிட்டே போய்)

ஆரோன் ராஜாவே என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். உங்கள் ஆச்சரியமான கற்களில் ஒரு நொண்டிப்பையனைச் சுகப்படுத்தக் கூடிய ஒரு கல் இல்லையா?

காஸ்பார் (காது கேட்காமல்) என்னடா?

ஆரோன் (தாயைப்பார்த்து) பறவாயில்லை. நன்றாய்த் தூங்குங்கள் ராஜாவே

(எல்லாரும் தூங்குகிறார்கள். தாய் மட்டும் தூக்கமில்லாமல் பாயமேலே உட்கார்ந்து)

தாய் அவ்வளவு தங்கம் அவ்வளவு தங்கமும் ஏழைகளுக்கு இருந்தால் என்ன ஆசீர்வாதம். பசியுள்ள பிள்ளைகள் ஆஸ்திக்காரருக்குத் தெரியுமா. ஐயோ, நான் கொஞ்சம் எடுத்தால் அவர்களுக்குத் தெரியமாட்டாது. என் பிள்ளைக்காகச் செய்யப் போகிறேன். என் பிள்ளைக்காக ....
(மெதுவாய்ப் போய்த் தங்கத்தைத் தொடுகிறாள். உடனே வேலைக்காரன் எழுந்து, அவளைப் பிடித்து அறையின் நடுவில் அவளை இழுத்துக்கொண்டு வருகிறான். பொன் அவள் கையில் இருக்கிறது.

வேலைக்காரன் திருடி! திருடி!
பையிலிருந்து தங்கத்தை எடுத்திருக்கிறாள்.

ராஜாக்கள் திருடி! திருடி! அந்தப் பொன்னைக் கொடு.

வேலைக்காரன் அந்தத் தங்கத்தைத் திரும்பக் கொடுத்துவிடு, இல்லாவிட்டால் நான் உன்னை அடிப்பேன்.

(ஆரோன் விழித்து இந்தக் காட்சியைப் பார்த்துப் பயந்து வேலைக்காரன் மேலே விழுந்து தன் குச்சியினால் அவனை அடிக்கிறான்)

ஆரோன் என் தாயை அடிக்காதே........அப்படிச்செய்தால் உன் பல்லை எல்லாம் உடைத்து விடுவேன். என் தாயைத் தொடாதே.

(அப்புறம் காஸ்பார் ராஜாவின் உடுப்பைப் பிடித்துக் கெஞ்சி—)

ராஜாவே என் தாய்க்கு மோசம் செய்யக்கூடாது என்று சொல்லுங்கள் என் தாய் நல்லவள். பாவஞ் செய்யமாட்டார்கள். நான்தான் பொய் சொல்லுகிறேன். நான்தான் திருடன்.

(மறுபடியும் வேலைக்காரனைப் பார்த்து)

என் தாயை அடிக்காதே. உன் எலும்புகளை எல்லாம் முறித்துப்போடுவேன். மண்டையை உடைப்பேன்.

(காஸ்பார் அடையாளம் காட்டவே- வேலைக்காரன் தாயை விட்டு விடுகிறான். தாய் மகனைப் பிடிக்கப்போகவே, மகன் தாயை அணைத்துக்கொண்டு இருவரும் அழுகிறார்கள்)

மெல்கியோர் ஓ! தாயே தங்கத்தை வைத்துக்கொள். அந்தக் குழந்தைக்குத் தங்கம் அவசியமில்லை, அன்பு, அன்புதான் அந்தப் பிள்ளையின் ராஜ்யத்திற்கு அவசியம். அவரின் குத்தப்பட்ட கைகளில் செங்கோல் இராது. அவர் தலைமேல் கிரீடம் வைக்கப்பட்டிராது. அவர் சீக்கிரமாய் நமக்குள்ளே வந்து புது ஜீவியத்தைக் கொடுப்பார். அவரின் ராஜ்ஜியத்தின் சாவிகள் தரித்திரருடைய கைகளில் இருக்கும் (மற்ற ராஜாக்களைப் பார்த்து) வாருங்கள். சிநேகிதர்களே நாம் புறப்பட்டுப் போகவேண்டும்.

(தாய் மகனை விட்டு மெல்கியோரின் முன்பாக முழங்காலில் விழுந்து)

தாய் கொஞ்சம் பொறுங்கள். உங்கள் தங்கத்தைக் கொடுக்கிறேன். நீங்கள் தேடுகிற ராஜாவுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறேன். நான் ஏழையாயிராவிட்டால் அந்தக் குழந்தைக்கு நானும் ஓர் வெகுமதியை அனுப்புவேன்.

ஆரோன் அம்மா! நான் என் குச்சியை அனுப்புகிறேன். அவருக்கு ஒருவேளை அது அவசியமாயிருக்கும் நான் இதைச் செய்வேன்.

தாய் மகனே, மகனே அது முடியாத காரியம்.

(ஆரோன் குச்சியைத் தூக்கி ராஜாக்களுக்குக் கொடுக்கப் போகிற நேரத்தில் திடீரென்று குச்சியில்லாமல் சரியாய் நடக்கிருன்)

ஆரோன் (மெதுவான சத்தத்துடன்)
தாயே நான் நடக்கிறேன்.
தாயே நான் நடக்கிறேன்.

காஸ்பார் அவன் நடக்கிருன்.

மெல்கியோர் அவன் நடக்கிருன்.

பெல்தாசார் அவன் நடக்கிருன்.

தாய் என் மகன் நடக்கிருன்.

ராஜாக்கள் நாம் எல்லாரும் வரப்போகிற புது ராஜாவை ஸ்தோத்திரிக்க வேண்டும் இது ஒரு அடையாளம் (ஆரோன் அந்தக் குச்சியைக் கொடுத்துவிட்டு அங்கு மிங்கும் ஓடி ஆடு கிருன்)

ஆரோன் அம்மா—அம்மா—பாருங்கள்
நான் குதிக்கிறேன். நான் ஓடுகிறேன்.
(ஆரோன் ஒருதரம் விழுகிருன். எல்லாரும் ஓடி அவனைத் தூக்கி) —

தாய் என் அருமை மகனே—கவலையாயிரு

ராஜாக்கள் பயப்படாதே அம்மா தேவகுமாரன் இந்தப் பையனை நேசிக்கிருர்.

காஸ்பார் ஓ! பாக்கியம்பெற்ற பிள்ளையே கிட்ட வா உன்னைத் தொட்டுப் பார்க்க விரும்புகிறேன்.

மெல்கியோர் } ஓ பாக்கியம் பெற்ற பிள்ளாய் உன்னைத் தொட்டுப்பார்க்க
பெல்தாசார் } விரும்புகிறேன்.

வேலைக்காரன் நானும் உன்னைத் தொடலாமா?

ஆரோன் (கொஞ்சம் கோபத்துடன்)
நீ என்னைத் தொடலாமா?

தாய் ஆரோன், ஆரோன் அப்படிப் பேசக்கூடாது.

ஆரோன் சரி. என்னைத் தொடலாம். ஆனல் இப்பொழுது நான் விளையாடக்கூடும். நான் போராடி மற்றவர்களை அடிக்கக்கூடும். நான் வேலை செய்யக்கூடும். அம்மா நான் ராஜாக்களோடு போகலாமா? என் குச்சியைக்கொண்டுபோய் அந்தக் குழந்தைக்குக் கொடுக்க எனக்கு ஆசை.

ராஜாக்கள் ஆம் அம்மா அவன் வரட்டும். அவனைப் பார்த்துக்கொள்ளுகிறோம். திரும்ப வரும்பொழுது ஒட்டகத்தின்மேல் அவனை வைத்துக்கொண்டு வருவோம்.

தாய் (மகனை அணைத்து) நிச்சயமாய்ப் போக ஆசையா ?

ஆரோன் ஆம் அம்மா.

தாய் சரி மகனே, நீயே போய் உன் சுகத்திற்காக அந்தக் குழந்தைக்கு நன்றியைச் செலுத்தவேண்டும். போய் ஆயத்தம்பண்ணு.

ராஜாக்கள் சந்தோஷமே ! பையன் வருகிறானே !

தாய் உன் குச்சியை எப்படிக் கொண்டுபோகிறாய் ?

ஆரோன் என் முதுகிலே நீங்கள் அதைக் கட்டுங்கள்.

தாய் மகனே நல்ல பையனாய் இரு. நிதம் குளிக்கவேண்டும். காது சுத்தமாயிருக்கவேண்டும். பொய் சொல்லக்கூடாது.

ஆரோன் ஆம் அம்மா நான் எல்லாம் சரியாய்ச் செய்கிறேன். நீங்கள் என் பூனையைப் பார்த்துக்கொள்ளுங்கள்.

மேய்ப்பர்கள் (வெளியே) எல்லாரும் வாருங்கள் வழியைக் காட்டுவோம்.

உள்ளே இருக்கிறவர்கள் சரி—வருகிறோம்.

(பாட்டுப் பாடிக்கொண்டு போகிறார்கள்)

தாய் தனியாய் வீட்டிலிருந்து மகனைப் பார்த்துத் தேவனைத் ஸ்தோத்தரிக்கிறாள்.

இரக்ஷணியமனோகரம்—குமாராநுபூதி (தொடர்ச்சி)

---

26 வெங்கானலை நீரென வேட்டிடலபோல
இங்கு ஆதரம் உற்று உனது இன்னருள் என்
பங்காக உன்னாத ஓர் பாமரன் நான்
மங்காத நலம் தரும் மானவனே.

மங்காத நலம் தரும்=குறையாத நல்வாழ்வை தரக்கூடிய; மானவனே=பெருமை வாய்ந்தவனே; வெங்கானலை=மிகுந்த வெப்பத்தால் வாயுவில் தோன்றும் அலையை; நீர் என=நீர் என்று; வேட்டிடல்போல்=விரும்புதல்போல்: இங்கு=நிலையில்லா இவ்வுலகில்; ஆதரம் உற்று=ஆசை வைத்து; உனது இன் அருளை=உனது நிலையான இனிய அருளை; என் பங்காக உன்னாத=எனக்குரிய பாகமாக எண்ணாத; பாமரன் நான்=அறிவீனன் நான்.

27 ஆவிக்குஉறு வெந்துயர் ஆற்றுகிலாப்
பாவிக்கு உனையல்லது பற்றுஉளதோ
காவிக்கு நிகர்த்த கருங்கணமரி
தேவிக்கு ஒரு புத்ர சிகாமணியே.

காவிக்கு நிகர்த்த=காவி மலருக்கு ஒத்த ; கரும்கண்மரி தேவிக்கு =கரிய கண்களையுடைய மரி அன்னைக்கு ; ஒரு=ஒப்பற்ற ; புத்ர சிகாமணியே=புதர சிரோ ரத்னமே ; ஆவிக்கு உறு வெம்துயர்= மனதுக்குள் உண்டாகிய கொடிய துயரத்தை ; ஆற்றுகிலாப் பாவிக்கு=தாங்க முடியாத பாவியாகிய எனக்கு ; உனை அல்லது பற்று உளதோ=உன்னை அன்றி வேறு ஆதரவு உண்டோ ;

28 போராடும் இகத்து உயிர் பொன்றிடும் நான்
சீராடு பொலன்கழல் சேர்ப்பை கொலோ
காராடு பொழிற்கண் ஓர்கால் உதிர
வேராடும் எழில்திரு மேனியனே.

கார் ஆடு பொழில்கண்=மேகம் தங்கும் கெத்சேமனே என்னும் சோலையில் ; ஓர்கால்=முன் ஒரு நாள் ; உதிர வேர் ஆடும்=இரத்த வேர்வை மூடிய ; எழில் திருமேனியனே=அழகிய திருமேனியையுடையவனே ; போர் ஆடும் இகத்து=நன்மைக்கு எதிர்த்து நிற்கும் உலகத்தில் ; உயிர் பொன்றிடும் நாள்=என் உயிர் போகும் நாளில் ; சீர் ஆடு பொலன் கழல்=சிறப்புப் பொருந்திய உன் பொற்பாத நிழலில் ; சேர்ப்பை கொலோ=என்னைச் சேர்த்தருள வாயோ.

29 கையேன் பிணியுற்று உழல் காயம் இதை
எய்யேன் பல தீவினை ஈட்டிடவும்
செய்யேன் எனது அன்பு உனசேவடிக்கே
ஐயா இஃது என்நிலை ஆரணனே.

பிணியுற்று உழல் காயம் இதைக் கையேன்=நோயுற்று வருந்தும் இவ்வுடலைக் கசந்து வெறுக்கமாட்டேன் ; பலதீவினை ஈட்டிடவும் எய்யேன்=பல தீமைகளைச் செய்வதில் பின் வாங்கேன் ; எனது அன்பு உன சேவடிக்குச் செயயேன்=உன் திருவடிகளுக்கு என அன்பின் சேவையைச் செய்யேன் ; ஐயா=ஐயனே ; இஃது என் நிலை=இதுதான் என் இழிவான நிலைமை ; ஆரணனே=வேதங்களுக்கு இருப்பிடமானவனே. [என=என்ன ; ஆரணம்=வேதம]

30 பின்னித் திகழ் என் பிழை அத்தனையும்
மன்னித்து இலகும் பதவாழ்வு அருள்வாய்
நன்னித்திலம் ஒத்த நகைத்துவர்வாய்
கன்னித்திலகம் தரு கான்முளையே.

நல் நித்திலம் ஒத்த=அழகிய முத்தைப் போன்ற; நகை=பற்களையும்; துவர்வாய்=சிவந்த வாயையும உடைய, கன்னித் திலகம் தரும்=கன்னிகளுக்குள் திலகம்போல விளங்கும் மரியன்னை ஈன்ற; கால்முளையே=திருக்குமாரனே [கால்=வம்சம்; கால் முளை=தாவீதின் வம்சம் விளங்கும்படி முளைத்தவர்] பின்னித்திகழ் என் பிழை அத்தனையும மன்னித்து=பின்னிக் கிடக்கின்ற என்பாவங்களை எல்லாம் மன்னித்து; இலகும் பதவாழ்வு=விளங்குகின்ற உன் திருவடியைச் சேரும் வாழ்வை; அருள்வாய்=ஈந்தருள்வாயாக.

31 நேமிக்கிரிபோல் நிமிர் நீசவினைக்
காமிக்கு உயர்விண கதிகூடுவதோ
சாமிக்கொருசேய் தயைகூர் பரிவால்
பூமிககு இடர்தீர்த்தனை புண்ணியனே.

நேமிக்கிரிபோல்=மலைகளுட் பெரிய நேமி என்னும் மலையளவு; நிமிர்=வளர்ந்த; நீசவினைக் காமிக்கு=இழிவான பாவங்களைச் செய்த காமியாகிய எனக்கு; உயா விண் கதி கூடுவதோ=உயர்ந்த மோக்ஷநிலை கிட்டுமோ; சாமிக்கு ஒரு சேய்=இறைவனுக்கு ஒரே பேறான குமாரனே; தயைகூர் பரிவால்=கிருபை நிறைந்த உன அன்பால; பூமிக்கு இடர் தீர்த்தனை=உலகிற்கு நேரிட இருந்த துன்பத்தைத் தீர்த்தாய்; புண்ணியனே=புண்ணிய சொரூபியே.

32 நெஞ்சக் கருமைக் கல் நினைப்பதனை
வஞ்சகக்கடுவாய் வசனிப்பதிலாப்
பஞ்சைக்கு அருள் பல்கிடுமோ பரமன்
மஞ்சக் கனியாய மனோகரனே.

பரமன்=இறைவனிடம்; கனியாய=கனிபோல் தோன்றிய; மஞ்ச=மைந்தனாகிய; மனோகரனே=யாவர் மனதையும் மகிழச் செய்பவனே; நெஞ்சக் கருமைக் கல் நினைப்பதனை=கருங்கல் போன்ற என் உள்ளம் நினைப்பதை; வசனிப்பது இலா=பேசாமல் பொய்யாய்ப்பேசுகின்ற; வஞ்சக் கடுவாய்=வஞ்சகமாகிய விஷத்தைக்கொண்ட வாயையுடைய; பஞ்சைக்கு=அற்பனாகிய எனக்கு; அருள்பல்கிடுமோ=உன் அருள் எவ்வாறு சுரக்கும்

வேத வினாக்களும் விடைகளும்

(கனம் செல்வம் டெயிலர் அம்மாள், வேதப்பாடசாலை, பசுமலை.)

(1) ஆறு வயது வரை தேவாலயத்தில் ஒளிக்கப்பட்டிருந்த இளவரசன் யார்?

(2) மோசேயின் தாயார் பெயர் என்ன?

(3) கிறிஸ்துவின் மூன்று பூர்வீக பிதாக்கள் யார்?

(4) யூதேயாவின் அரசர்களில் வேளாண்மைப் பிரியன் யார்?

(5) மக்கதோனியாவிலுள்ள எந்த சபைகளுக்குப் பவுல் கடிதங்கள் எழுதினர் ?

(6) சிஷரில் நீண்டகாலம் ஜீவித்த சிஷன் யார் ?

(7) உடன்படிக்கைப் பெட்டியைப் பிடித்துக்கொண்ட புறஜாதி எது ?

(8) யோர்தான் நதிக்கு இப்புறத்திலும், யோர்தான் நதிக்கு அப்புறத்திலும் பாகம் பெற்ற கோத்திரம் எது ?

(9) பரி பவுல் எந்த கிரேக்க வியாபார பட்டணங்களுக்கு தனது நிருபங்களை எழுதியுள்ளார்.

(10) வேதத்திலுள்ள எந்த புஸ்தகங்களை ராஜாக்களின் புஸ்தகத்திற்குச் சமமாய்ச சொல்லாம் ?

(11) ஏசாயா தீர்க்கதரிசி எங்கே வசித்தார் ?

(12) வீனஸ் நட்சத்திரத்தின் பெயர் கொண்ட யூத ராணி யார் ? அவளுடைய யூதப் பெயர் என்ன ?

கிறிஸ்மஸ் விடுகதை

" நான் யார் "?

(வேதப்பாடசாலை மாணவர் ஸ்ரீ I. சாமுவேல்)

1. ராமாவிலிருந்தல்ல, கில்காலிலிருந்து வந்த நால்வரில் நான் முதல் ஆள்

2 மரத்திலிருந்தல்ல, மறியின் மீதிருந்திறங்கிய இருவரில் இரண்டாவது ஆள்.

3. சிலோவாமிலிருந்தல்ல பெதஸ்தா குளத்திலிருந்து எழும்பி வந்த நால்வரில் மூன்ருவது ஆள்.

4. தர்சுவிலிருந்தல்ல; தமஸ்குவிலிருந்து வந்த நால்வரில் நடுவில் காணும் இருவர் இணைபிரியாதிருக்கிறோம்.

5 எகிப்தில் அல்ல, பலஸ்தீனவில் உதித்த ஐவரில் நான் முதல் ஆள்

6 வானத்திலிருந்தல்ல, வண்டியிலிருந்திறங்கிய மூவரில் முதல்வரைத் தள்ளி மற்ற இருவர் இணைபிரியாதிருக்கிறோம்.

7. எனக்குக் கால் இல்லை கை உண்டு

குறிப்பு :—பார்க்கப் பலராகத் தெரிந்தாலும் பதத்தில் இருவரா பண்பில் ஒருவனே. நான் யார் ?

பந்தயக் கதைப்போட்டி

பரிசு வாங்க முன் வாருங்கள் ! எல்லாரும் இதில் பங்கெடுக்கலாம் !

முதல் பரிசு	ரூ. 20.
இரண்டாம் பரிசு	ரூ. 15.
மூன்றாம் பரிசு	ரூ. 10.
நான்காம் பரிசு	ரூ. 5.

விதிகள்

1. 6—12 வயதுப் பள்ளி மாணவருக்குப் பொருத்தமான கதையாயிருக்க வேண்டும்.
2. சன்மார்க்க அல்லது மார்க்கப் போதனை அடங்கியதாயிருக்கவேண்டும். உதாரணமாய் கீழ்கண்ட பொருள்களின்மேல் கதை எழுதலாம் :—உதவிசெய்தல், தைரியம், உண்மை, பகிர்ந்துகொள்ளல்.
3. தானே சுயேட்சையாய் எழுதுகிற கதையாயிருக்க வேண்டும் காப்பியண்ணின கதையாயிருக்கக் கூடாது
4. 1000 வார்த்தைகளுக்குமேல் எழுதக்கூடாது.
5. முழுக் காயிதத்தில் ஒருபக்கம் மாத்திரம் தெளிவாய் எழுதவும்.
6. நியாயாதிபதிகளின் தீர்ப்பே முடிவானது
7. தெரிந்தெடுக்கப்பட்ட கதைகள் அத்தியட்சாதீனப் பத்திரிகை "சத்தியவர்த்தமானி"யில் பிரசுரிக்கப்படும்.
8. எல்லாக்கதைகளும் நூல் கழகத்திற்கு சொந்தமாகும்
9. கதைகளை "எ சாமுவேல் ஐயர், வேதப்பாடசாலைத் தலைவர், பசுமலை" என்ற விலாசத்திற்கு பெப்ரவரி 1, 1955க்கு முன் அனுப்பிவைக்கவும்.

மரண அறிவிப்பு

மதுரை இளந்தோப்பு அபிஷேகநாதர் ஆலய குருவானவரின் அருமை மனைவி Mrs. ரோஸம்மாள் ஆர்தர், நான்கு நாட்களாக சுகவீனமாயிருந்து, 27—11—54 சனிக்கிழமை காலை 5 மணிக்கு மிகுந்த சமாதானத்தோடு கர்த்தருடைய ராஜ்யம் சேர்ந்தார்கள். அவர்கள் மரிக்குமுன் பரலோக கீத சத்தத்தைக் கேட்டார்கள். ஆண்டவர் அவர்கள் படுக்கையின் பக்கத்திலிருந்து ஆறுதல் படுத்திக்கொண்டேயிருப்பதாகச் சொன்னார்கள். பல வேத வசனங்களைக் கூறினார்கள் அவர்கள் ஜீவன் பிரியும்போது அவர்கள் வாயிலிருந்து பிரகாசமான ஒளி தோன்றினது பக்கத்திலுள்ள யாவரும் இதைக் கண்ணுற்று ஆச்சரியப்பட்டார்கள். அவர்களுடைய அதிசயமான மரணம், அவர்கள் கணவருக்கும், பிள்ளைகளுக்கும், குடும்பத்தாருக்கும் மிக்க ஆறுதலையும், ஊக்கத்தையும் அளித்திருக்கிறது.

அன்று மாலை 4 : 30 மணிக்கு அவர்களுடைய சடலம் S. P. G. கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அடக்க ஆராதனையில் மகாகனம் அத்தியட்சரவர்களும், கனம் D. M. சாமுவேல், கனம் D. A. கிரகரி, கனம் P. W. டேனியல் ஐயர் மாரும் பங்கெடுத்தார்கள்.

“ கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள் கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம் ”.

Lenox Press, Pasumalai, 4—12—'54 480 C.